Economics & Physical Education apply to the
Correspondent within 10 days through
E-mail: ctkmhs@gmail.com, Tel: 9443406607

றும் உயர்ந்த ஆராய்ச்சி பட்
ஆகும்.
.ஏ.எஸ். அதிகாரி எம்.எஸ்.
முகம், முன்னாள் அமைச்சர்
னியப்பன்,
ன்னை திரு
லிக்கேணி
வி போலீஸ்
ஷனர் எம்.
.பாஸ்கர்,
சபை செய
ளர் சீனிவா
ஆகியோ
பி.எச்.டி.
ாய்ச்சிபட்டம்
றனர்.

5 வாய்ப்பு
ண்டும்.

கும்

அமைச்சர்
'திராவிட
80 சதவீத
கம் பெறுப
கள். கல்வி
கல்வியை

மல் பி.ஏ.,
ம் மத்திய
ர உள்ளது.
காள்ளைய

அமைச்சர்
ண மேயர்
முதன்மை
லைக்கழக
ளைச்சாமி,
ரிட்டோர்

பட்டம்
படும் மிக
ஜராஜன்
ந்து டி.லிட்
பேருக்கும்,
பேருக்கும்
ாவட்டத்
திறனாளி
னாளிகள்
னர்.
பெற்ற 731
து குறிப்பி
1 லட்சத்து

TMB
Tamilnad Mercantile Bank Ltd
Be a step ahead in life

CIN : U65110TN1921PLC001908
பதிவு அலுவலகம்: 57, V.E. ரோடு, தூத்துக்குடி - 628 002.
தொலைபேசி: 0461-2321932 (E), 2321929 (E)
இணையதளம்: www.tmb.in | மின்னஞ்சல்: shareholders@tmbank.in

## 98வது, 99வது மற்றும் 100வது ஆண்டு பொதுக்குழுக்கூட்டங்கள் மற்றும் மின் வாக்கெடுப்பு பற்றிய அறிவிப்பு

தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கி லிமிடெட் உறுப்பினர்களின் 98வது, 99வது மற்றும் 100வது ஆண்டுப் பொதுக்குழுகூட்டங்கள் (AGMs) ஜூன் 9, 2022 வியாழன் அன்று காலை 11.30 மணி (IST) முதல் நடைபெறும் என்று இந்த அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்படுகிறது. மேற்கண்ட கூட்டங்கள் காணொலி காட்சி வழியாகவோ, வேறு ஒலி காட்சிகள் வழியாகவோ, ஒரு பொதுவான இடத்தில் உறுப்பினர்களின் நேரடி வருகையின்றி, இந்திய அரசின் நிறுவன விவகாரங்களுக்கான அமைச்சகம் வெளியிட்ட டிசம்பர் 14, 2021 தேதியிட்ட சுற்றறிக்கை எண். 21/2021, மே 05.2020 தேதியிட்ட சுற்றறிக்கை எண். 20/2020, ஜனவரி 13. 2021 தேதியிட்ட சுற்றறிக்கை எண். 02/2021, டிசம்பர் 08.2021 தேதியிட்ட சுற்றறிக்கை எண். 19/2021 மற்றும் மே 05.2022 தேதியிட்ட சுற்றறிக்கை எண். 02/2022 யின் படி பொதுக்குழுகூட்டங்களின் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள வணிகங்களைப் பரிவர்த்தனை செய்ய இந்த அறிவிப்பு கொடுக்கப்படுகிறது.

மேற்கூறிய பொதுக்குழுக்கூட்டங்களின் அறிவிப்பும், 2019-20, 2020-21 மற்றும் 2021-22 நிதியாண்டுகளுக்கான ஆண்டறிக்கைகளும், வங்கி / பதிவாளர் மற்றும் பரிமாற்ற முகவர் (RTA)/ முதலீட்டு பங்கேற்பாளரிடம் மின்னஞ்சல் முகவரியை பதிவுசெய்த பங்குதாரர்களுக்கு மின்னஞ்சல் வடிவில் அனுப்பப்பட்டுள்ளது. மேலும் மேற்கூறிய பொதுக்குழுக்கூட்டங்களின் அறிவிப்பும், ஆண்டறிக்கைகளும் வங்கியின் அனைத்து பங்குதாரர்களுக்கும் தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளது. பங்குதாரர்கள் மேற்கூறிய பொதுக்கூட்டங்களின் அறிவிப்பு மற்றும் ஆண்டறிக்கைகளை வங்கியின் இணையதளம் - www.tmb.in 'Investor-Relations' பிரிவின் கீழும், சென்ட்ரல் டெபாசிட்டரி செக்யூரிட்டீஸ் (இந்தியா) லிமிடெட் ("CDSL") இணையத்தளத்திலும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

இப்பொதுக்குழுக்கூட்டங்க்ளில், பங்குதாரர்கள் காணொளி காட்சி / வேறு ஒலி காட்சிகள் மூலம் பங்கேற்கலாம். அவ்வாறு இப்பொதுக்குழுக் கூட்டங்களில் பங்கேற்பதற்கான விவரங்கள் பொதுக்குழுக் கூட்டங்களின் அறிவிப்பில் வழங்கப்பட்டுள்ளது.

இப்பொதுக்குழு கூட்டங்களின் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து தீர்மானங்களிலும் வாக்களிக்க வங்கி அதன் அனைத்து பங்குதாரர்களுக்கும் மின்னணு வாக்குப்பதிவு வசதியை வழங்குகிறது. இப்பொதுக்குழுக் கூட்டங்களுக்கு காணொளி காட்சி / வேறு ஒலி காட்சி வசதி மற்றும் மின்னணு வாக்குப்பதிவு வசதியை பங்குதாரர்களுக்கு வழங்கிட வங்கி சென்ட்ரல் டெபாசிட்டரி செக்யூரிட்டீஸ் லிமிடெட் ("CDSL") ஐ நியமனம் செய்துள்ளது.

**மின்னணு வாக்குப்பதிவு:**

| | |
|---|---|
| மின்னணு வாக்குப்பதிவு ஆரம்பம் | திங்கட்கிழமை, ஜூன் 06, 2022 காலை 9.00 மணி IST |
| மின்னணு வாக்குப்பதிவின் முடிவு | புதன்கிழமை, ஜூன் 08, 2022 மாலை 5.00 மணி IST |
| இப்பொதுக்குழு கூட்டங்களில் மின்வாக்களிப்பதற்கான தகுதியை நிர்ணயிக்கும் தேதி:- (அதாவது மின்னணு முறை அல்லது பொதுக்குழு கூட்டங்களில் வாக்களிப்பதற்கான தகுதியை நிர்ணயிக்கும் தேதி) | வியாழன், ஜூன் 02, 2022 |

கூடுதலாக, வங்கி இப்பொதுக்குழுக் கூட்டங்கள் நடைபெறும் நாளில் மின்னணு முறையில் வாக்களிக்கும் வசதியை வழங்குகிறது. அவ்வாறு தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு முறைகளையும் மற்றும் பொதுக்குழு கூட்டங்கள் நடைபெறும்போதும் மின்னணு வாக்குப்பதிவிற்கான செயல் முறைகளையும் அறிவிப்பில் வழங்கப்பட்டுள்ளது.

ஏப்ரல் 29, 2022 நடைபெற்ற கூட்டத்தில், மார்ச் 31, 2022 இல் முடிவடைந்த நிதியாண்டிற்கான இறுதி ஈவுத்தொகையாக ரூ.10/- தலா ரூ.10/- முக மதிப்புள்ள ஒரு பங்கிற்கு (வழக்கமான ஈவுத்தொகை ரூ.6/- ஒரு பங்குக்கு + ரூ.4/- ஒரு பங்குக்கு சிறப்பு ஈவுத்தொகை நூற்றாண்டு ஆண்டு நினைவாக) இயக்குநர்கள் பரிந்துரைத்திருக்கிறார்கள். இப்பரிந்துரை, ரிசர்வ் வங்கியின் ஒப்புதலுக்கு உட்பட்டது.

நிதிச்சட்டம் 2020, யின்படி ஏப்ரல் 01, 2020 இல் இருந்து நிறுவனங்கள் வழங்கும் ஈவுத்தொகை, பங்குதாரர்களின் வரி வருமானத்திற்கு உட்பட்டதாகும். எனவே வங்கி அளிக்கும் ஈவுத்தொகையில் இருந்து குறிப்பிட்ட விகிதத்தில் வரிப்பிடித்தம் செய்ய வேண்டியுள்ளது. பங்குதாரர்கள், தங்கள் பான் (PAN) எண்ணை முதலீட்டு பங்கேற்பாளரிடம் (DP) (பங்குகளை மின்னணு வடிவத்தில் வைத்திருந்தால்) மற்றும் பதிவாளர் மற்றும் பரிமாற்ற முகவரிடம் (RTA) (பங்குகளை பத்திரம் வடிவத்தில் வைத்திருந்தால்), பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இயக்குனர் தேர்தல் தொடர்பான விவரங்கள் தற்போது நடைபெற உள்ள 3 ஆண்டு பொதுக்குழு கூட்டங்களில் இறுதியாக நடைபெற உள்ள 100வது ஆண்டு பொதுக்குழு கூட்டத்தின்போது எடுத்துக்கொள்ளப்படும். இயக்குனர் தேர்தலில் பங்கேற்க உள்ளவர்கள் குறித்த அறிவிப்பினை பத்திரிகை செய்திகளின் மூலம் பங்குதாரர்களுக்கு தெரிவிக்கப்படும். இயக்குனர் தேர்தலில் பங்கேற்க விரும்பும் நபர்கள் குறித்த தகவல்களை கூட்டம் நடக்க உள்ள தேதிக்கு குறைந்தது 14 நாட்கள் முன்னதாக முன் மொழிந்து பதிவு செய்துகொள்ள வேண்டும் எனவும் இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

பொதுக்குழு கூட்டத்தில் பங்கேற்பது, மின்னணு வாக்குப்பதிவு முறையில் பங்கேற்பது போன்றவை குறித்து கேள்விகளோ, பிரச்சனைகளோ இருந்தால், நீங்கள் www.evotingindia.com - help section - இல் அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் (FAQs) / மின்னணு வாக்குப்பதிவு கையேடு பகுதிக்கு சென்று தேவையான தகவலை பெறலாம். மேலும் helpdesk.evoting@cdslindia.com என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அல்லது கீழ்கண்ட தொலைபேசி எண்களில் திரு. ராகேஷ் தல்வி, சீனியர் மேலாளர், (CDSL) 022-23058542/43 ஐ தொடர்பு கொள்ளவும்.

**தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கி-க்காக**

**தூத்துக்குடி**
**மே 16, 2022**

**பிரகாஷ் சந்திர பாண்டா**
**கம்பெனி செக்ரட்டரி**